பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை 03.10.2021 கதிர் 196

## மேல் மாகாணத்தில் 1,156 பேர் சிக்கினர்

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் பொலிஸ் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,156 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ☞2

## சதிகாரர்களை அரசிலிருந்து உடன் வெளியேற்ற வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் வலியுறுத்து



அரசுக்குள் இருக்கும் சூழ்ச்சியாளர்களை - சதிகாரர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலத்துக்கமைய செயற்பட்டு வருகின்றது. அதனைச் சீர்குலைக்க அரசில் அங்கம் வகிக்கும் எவராலும் முடியாது.

சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களை வெளியில் வந்து விமர்சிக்கின்றனர்.

இவர்கள் அரசுக்குள் இருந்துகொண்டு அரசையே விமர்சித்து வருகின்றனர். இது எந்த வகையிலும் பொருத்தமற்ற செயலாகும்.

இப்படியான நபர்கள் குறித்து மிகத் ☞2



## ஹாட்லி மாணவன் பரிதாப உயிரிழப்பு

சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ☞2

# எந்தவொரு சூழ்ச்சியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது

## வெளியேற விரும்புவோர் வெளியேறலாம்; பங்காளிகளுக்கு பஸில் மறைமுகப் பதிலடி

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம்.**

**– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.** ☞2



## வவுனியாவில் வாள்வெட்டு 4 பேர் வைத்தியசாலையில்

(வவுனியா நிருபர்)

வவுனியா, கோவில்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியதில் நால்வர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் நின்றிருந்த குறித்த நபர்கள் வீதியால் செல்பவர்களை தாக்கியதுடன் வீடுகள் சிலவற்றுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தாக்கினர்.

இதனால் பெண் உட்பட நால்வர் காயமடைந்த ☞2

## திருமலையில் எண்ணெய்த் தாங்கிகளை பார்வையிட்ட இந்திய வெளியுறவு செயலர்



இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கி தொகுதிகளை இன்று பார்வையிட்டார்.

இந்த எண்ணெய்த் தாங்கிகளின் தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் இலங்கையின் சக்தி ☞2

## சீனாவின் ஆதிக்கம் பற்றி இந்தியா கடும் அதிருப்தி!



இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

கிழக்கின் திருகோணமலைக்குச் சென்ற அவர், அங்குள்ள முக்கியமான கேந்திர இடங்களைப் பார்வையிட்டார்.

அந்தப் பிரதேசங்களில் இடம்பெறும் அபிவிருத்திகளையும் அவர் பார்வையிட்டமையுடன், ☞2

## அரசுக்கு ‘கூஜா’ தூக்கும் செயற்பாடுகளை எம்மவர்கள் நால்வரும் கைவிடல் வேண்டும்

### ஹக்கீம் ஆக்ரோஷம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கத்துக்கு தாரைவார்ப்பதற்கு விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அந்த நான்கு உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு ‘கூஜா’ தூக்கும் செயற்பாடுகளை முழுமையாகக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். ☞2

### வவுனியாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற அவர் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டார். (100)

### திருமலையில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துறைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்திய - இலங்கை பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்தும் அதிகாரிகளால் அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

### எந்தவொரு சூழ்ச்சியிலும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கெரவலப்பிட்டிய யுகதனவி மின்உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு 'மொட்டு'கூட்டணி அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த்தலாம்; விமர்சிக்கலாம்.

ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும் வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது.

அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம். எவரும் புதிதாக இணையலாம். எமது கதவு எப்போதும் திறந்திருக்கும்.

ஆனால், அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம் - என்றார்.

### ஹாட்லி மாணவன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உயிரிழந்தவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் மண்டான், கரணவாய் தெற்கைச் சேர்ந்த கணேசன் கிருசிகன் (வயது - 16) என்பவராவார்.

உடல் நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பில் நேற்று கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் மாணவன் உயிரிழந்தார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவிருந்த நிலையில் காலமாகியுள்ளார்.

அவர் பாடசாலை மட்டங்களில் இடம்பெறும் போட்டிகள் மற்றும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்த திறமையான மாணவன் என்று பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொடுத்து பாடசாலைக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார் என்றும், அவரின் இழப்பு ஹாட்லிக் கல்லூரிக்கு ஒரு பேரிழப்பு என்றும் பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று இடம்பெற்றது.

### சதிகாரர்களை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துரிதமாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்தச் சூழ்ச்சியாளர்கள் அரசுக்குள் இருந்தால், அது அரசின் பயணத்துக்குத் தடையாக இருக்கும். எனவே, இந்தச் சதிகாரர்களை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் - என்றார்.

### அரசுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகம்ஒன்றுக்குக்கருத்துவெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எமது கட்சியின் நான்கு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்ததன் பின்னர் அதுபற்றிய பல்வேறு பேச்சுக்களை கட்சிக்குள் நடத்தியிருந்தோம். கட்சியின் தலைமையினதும், உயர்பீடத்தினதும், போராளிகளினதும் தீர்மானத்துக்கு மாறாக செயற்படக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தோம். அதற்கு அந்த உறுப்பினர்களும் இணக்கம் கண்டனர்.

இதனைவிடவும், நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களின் போது கட்சிக்குள் பிளவுகள் என்ற அபிப்பிராயம் ஆதரவாளர்களுக்கும், மக்களுக்கும் சென்று குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்புக்களின் போது வாக்களிப்பதற்கு இணக்கமில்லாது விட்டால் ஆகக்குறைந்தது அதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அவர்களை அறிவுறுத்தியிருந்தேன். அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்கள்.

ஆனாலும் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நிதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது அவர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். அதுபற்றி வினவிய போது, அவரால் ஒதுக்கீடு செய்யப்படும் அபிவிருத்தி நிதிகள் தமக்குக் கிடைக்காது போய்விடும் என்ற பீதியின் காரணத்தால் வாக்களித்தோம் எனக் கூறுகின்றார்கள்.

இந்த உறுப்பினர்கள் முதலில் அபிவிருத்தி என்ற மாயையில் இருந்து வெளிவர வேண்டும். கிழக்கு மாகாணம் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களும் இந்த ஆட்சியாளர்கள் மீது மிகுந்த வெறுப்படைந்துள்ளார்கள்.

அவ்விதமாக இருக்கையில் ஆட்சியாளர்களுக்கு 'கூஜா' தூக்குவதை எம்மவர்கள் முதலில் நிறுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் அவர்கள் அதற்குரிய விலையை நிச்சயம் கொடுக்க வேண்டி வரும்.

இந்த உறுப்பினர்களை அரசாங்கத்துக்கு தாரை வார்த்துவிடக்கூடாது என்பதற்காக நான் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கட்சியிலிருந்து அகற்றுதல் போன்ற கடுமையான தீர்மானங்களை இதுவரையில் எடுக்காது இருக்கின்றேன்.

ஆகவே, இவர்கள் களயதார்த்தத்தினைபுரிந்துகொண்டு, முஸ்லிம்காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான கட்சி என்பதை உணர்ந்து கொண்டு அதிகாரங்கள், அமைச்சுப்பதவிகளுக்கு சோரம்போகாது தற்போதுள்ள இரண்டும் கெட்டான் நிலையைக் கைவிட்டு முடிவொன்றை அவர்கள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

### சீனாவின் ஆதிக்கம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

இந்நிலையில், நாளை கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரை சந்திக்கவுள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலர் அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை இந்திய உயர்ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் சந்திக்கவுள்ளார்.

இலங்கையில், சீனாவின் ஆதிக்கம் குறித்தான புதுடில்லியின் அதிருப்தியை இந்திய வெளியுறவு செயலர் ஷரிங்லா, இலங்கை அரசின் உயர்மட்ட தலைவர்களிடம் பகிர்வார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

### மேல் மாகாணத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 531 பேரும், ஊழல் - மோசடிக் குற்றச் செயல்கள் தொடர்பில் 491 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஐக்கியம் முக்கியம்: யாருக்கு?

ஐக்கியம் பற்றி வலியுறுத்தி இருக்கின்றார் சம்பந்தன். வழமையாக தேர்தலுக்குத் தேர்தல் வரும் அறிக்கை இப்போது மாறுபாடான நேரத்தில் வந்திருக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம். நிலையான தீர்வை எட்ட ஐக்கியம் வேண்டும் என்ற பழைய கதை, மீண்டும் ஒரு புதிய மொந்தையில் இப்போது வந்துள்ளது.

புலிகளின் அழிவுக்குப் பின்னர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக கூட்டமைப்பு என்ற 'ஒற்றுமைக் குதிரை வண்டி'யில் அரசியல் சொகுசுப் பயணம் செய்கின்றது சம்பந்தன் அண்ட் கோ. அதன் சவாரித் தம்பர் சம்பந்தன்தான்.

பன்னிரண்டு ஆண்டுகளாக சளைக்காமல் மக்கள் அந்த வண்டியை குதிரைகளாக இழுக்கின்றனர். அதற்கு முன்னால் அவ்வப்போது 'இதோ தீர்வு', 'அதோ தீர்வு' என்று கரட்டைக் காட்டி, கட்டித்தொங்க விடுகிறார் சம்பந்தன். குதிரைகளாக மக்கள் அதை எட்டிப் பிடிப்பதாக நினைத்துக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஓடட்டும். இப்போதும் கூட 'நிலையான தீர்வு' என்ற இன்னொரு கரட்டை இந்த அறிக்கை மூலம் தொங்க விடுகிறார் அவர். தொங்க விடட்டும்.

'ஒற்றுமைக் குதிரை வண்டியில்' குழப்பம் ஏற்பட்டு விட்டது என்ற கவலை அவருக்கு. அதையொட்டித் தான் இப்போது அறிக்கையும் விட்டிருக்கின்றார். ஆனால் அந்த முரண்பாட்டுக் குழப்பத்தை அடையாளம் காண்பதில் அவர் தவறு செய்திருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. இப்போது குழப்பம் – ஐக்கிய முரண்பாடு – அவரது சொகுசு பயண வண்டியை இழுக்கும் குதிரைகளான மக்களில் அல்ல. ஐக்கியத்தின் பெயரால் அந்த வண்டியில் தமது சொகுசுப் பயணத்துக்கு அவர் தம்முடன் சேர்த்திருக்கும் கோமாளிகள் கூட்டத்தில்தான் (Bunch of Jokers) குழப்பம்.

ஐக்கியம் என்பது மக்கள் மத்தியில் இருந்து உணர்வு ரீதியாக உற்பவமாகி, எழுந்து, பரவி இறுக வேண்டும். ஒரு கோமாளிகள் குழு தொடர்ந்தும் பதவிக் கதிரைகளைத் தக்க வைப்பதற்காக மக்களின் மீது கட்டியடிக்கப்படும் மந்திரமாக 'ஐக்கியம் முக்கியம்' இருக்கக் கூடாது.


ஐக்கியமாக முன்னின்று செயற்படும் தகுதியும் திறமையும் உரிமையும் உள்ள தரப்புகளை எல்லாம் புறமொதுக்கி, வண்டி இழுக்கும் குதிரைகளாக்கி விட்டு, தாமும் தமது கோமாளிக் கூட்டமும் தொடர்ந்து பதவியில் பயணம் செய்வதற்கான தந்திரமாக 'ஐக்கிய முக்கியம்' என்ற மந்திரத்தை சம்பந்தன் பேசுவது மக்களை ஏமாற்றும் முழு அயோக்கியத்தனம்.

தேர்தல் சமயத்தில் உங்கள் தெரிவுக்காக ஐக்கியம் என்ற அந்த கோஷத்தில் வீட்டுக்குள் வெளவால்களைக் குடியேற்றினால் எந்நேரமும் குழப்பம் தான். இனிமேலும் அந்தக் கோமாளிகள் கூட்டை நம்பியிருந்து வீட்டைக் கெடுக்காதீர்கள். திறமையும் தகுதியும் உள்ள தரப்புக்களை ஒன்றிணைத்து உண்மையான ஐக்கியத்தின் பேரில் வீட்டை ஆரம்பத்திலிருந்து ஒழுங்குபடுத்த முயற்சியுங்கள். இப்போது இந்தப் பழம் வீட்டில் குடிகொண்டிருக்கும் – பதவி ஆசை பிடித்த வெளவால்களை நம்பாதீர்கள். துரத்துங்கள்.

தற்சமயம் நீங்கள் கூறும் ஐக்கியம் யாருக்கு அவசியம்? ஐக்கிய முரண்பாடு இன்று யாருக்கு இடையில்? மக்களுக்கிடையிலா அல்லது உங்களுடன் இருக்கும் கோமாளிகள் கூட்டத்துக்கு இடையிலா? அதைப் புரிந்தால் சம்பந்தனுக்கு உண்மை விளங்கும். என்ன வைத்தியம் செய்ய வேண்டும் என்பதும் புரியும். அவர் பழுத்த அரசியல்வாதி அல்லவா?

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள்

## ரணில் விடுத்துள்ள பணிப்பு



ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான திகதியை வழங்கியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 20 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிக முக்கியமான நாள் என்பதால் கட்சித் தலைவர் அந்த நாளைத் தெரிவு செய்துள்ளார் எனக் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒக்ரோபர் 20 ஆம் திகதி கட்சியின் நிறுவுநர் ஜெனரல் டி. எஸ். சேனாநாயக்கவின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது. ரணில் விக்கிரமசிங்க மூன்று பிரிவுகளின் கீழ் கட்சி உறுப்பினர்களை நியமிக்க முன்மொழிந்துள்ளார்.

அவற்றில் முதலாவது 1,000 உறுப்பினர் அட்டை முறைமை, இரண்டாவது 'டிஜிற்றல் உறுப்பினர்' அமைப்பு அல்லது ஒன்லைன் உறுப்பினர் முறைமை, மூன்றாவதாக வழக்கமான முறையில் கிராம அளவில் உறுப்பினர்களை சேர்ப்பது.

இந்நிலையில், நாடு முழுவதும் அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் கட்சி உறுப்பினர்களை நியமிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போதுள்ள அனைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் பதிவுகளையும் புதுப்பிக்க கட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராமத்துடனான உரையாடல் மருதங்கேணியில் மக்கள் சந்திப்பு





ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டத்துக்கமைவாக, பிரதமரின் வழிகாட்டுதலில், நிதியமைச்சர் மற்றும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவால், இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் 30 லட்சம் ரூபா அபிவிருத்திக்காக ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 17 கிராமங்களுக்குமான களவிஜயம் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதனால் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இந்த விஜயத்தில், கிராமங்களுக்கான உட்கட்டுமானம், வாழ்வாதாரம், சூழலியல், மற்றும் கடலோர பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த மக்கள் சந்திப்பில், பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலக அதிகாரிகள், மருதங்கேணி பிரதேச இணைப்பாளர் மற்றும் கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# இராணுவத்தின் பஸ் வவுனியாவில் விபத்து

## பலர் காயம்



வவுனியாவில் இராணுவ பஸ் விபத்திற்குள்ளானதில் பலர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ பஸ் பூனாவைக்கு அண்மித்த பகுதியில் வந்து கொண்டிருந்த போது முன்னால் சென்று கொண்டிருந்த லொறியுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தில் பஸ்ஸில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், மேலும் இருவர் சிறு காயங்களிற்குள்ளாகினர். வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கருக்கலைப்பு உரிமை; அமெரிக்கா முழுவதும் போராட்டம்




கருக்கலைப்பு உரிமைகளை ஆதரித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கருக்கலைப்புக்கான அணுகலை கடுமையாக கட்டுப்படுத்தும் டெக்சாஸ் மாநிலத்தின் ஒரு புதிய சட்டத்திற்கு எதிராக இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது. 1973 ஆம் ஆண்டு நாடு முழுவதும் கருக்கலைப்பு சட்டப்பூர்வமாக்கபட்டது.

இந்நிலையில் அதனை தொடருமாறு கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் உச்ச நீதிமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துகின்றனர்.

## பிரான்ஸை சமாதானப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா



கடந்த மாதம் வொஷிங்டன் மற்றும் லண்டனுடனான உடன்படிக்கைக்கு ஆதரவாக ஆஸ்திரேலியா பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை ரத்து செய்ததை அடுத்து அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் இடையேயான உறவுகள் வலுவிழந்தன.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை பிரான்ஸிற்கு செல்லத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டத்திற்கு தலைமை தாங்குவதுடன் பிரெஞ்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என இராஜாங்க அமைச்சின் ஊடகப்பேச்சாளர் கூறியுள்ளார்.

பிளிங்கனுடன் அமெரிக்க காலநிலை தூதர் ஜோன் கெர்ரி, அமெரிக்க வர்த்தக பிரதிநிதி கேத்தரின் டாய் மற்றும் பாரிஸில் உள்ள பிற அமெரிக்க அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி அமெரிக்கா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தோ-பசுபிக் பிராந்தியத்திற்கான ஒரு புதிய பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தம் காரணமாக பிரான்ஸிடமிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான 4 கோடி டொலர் மதிப்புள்ள உடன்படிக்கையை ஆஸ்திரேலியா ரத்து செய்தது. இந்த நடவடிக்கை முதுகில் குத்தும் செயற்பாடு என பிரான்ஸ் கடுமையாக விமர்சித்திருந்தது.

இந்நிலையில் இரு நாடுகளின் உறவுகள் குறித்து ஆழமான ஆலோசனைகள் நடத்தப்படும் என பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடனான தொலைபேசி அழைப்பில் ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்திருந்தார்.

## தாய்வான் வான் பாதுகாப்பு மண்டலத்தில் அத்துமீறி நுழைந்த சீன விமானங்கள்!



தாய்வான் வான் பாதுகாப்பு மண்டலத்தில் 38 சீன இராணுவ ஜெட் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன என தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது இன்றுவரை பெய்ஜிங்கின் மிகப்பெரிய ஊடுருவல் என விவரிக்கப்படுகின்றது.

அணுசக்தி திறன் கொண்ட வெடிகுண்டுகள் தாங்கும் விமானம் உட்பட பல போர் விமானங்கள் தங்களது வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் இரண்டு முறை நுழைந்தன என்று பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த தாய்வான், அதன் ஜெட் விமானங்கள் மற்றும் ஏவுகணை அமைப்புகளை நிலைநிறுத்தியது. சீனா, ஜனநாயக தாய்வானை பிரிந்த மாகாணமாக பார்க்கிறது. ஆனால் தாய்வான் தன்னை ஒரு இறையாண்மை கொண்ட நாடாக பார்க்கிறது. தாய்வான், தீவு அருகே சீனாவின் விமானப்படையின் தொடர்ச்சியான பணிகள் குறித்து ஒரு வருடத்திற்கும் மேலாக புகார் அளித்து வருகிறது. இதுகுறித்து தாய்வான் பிரதமர் சு செங்-சாங் கூறுகையில், 'சீனா இராணுவ ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளது. இது பிராந்திய அமைதியை சேதப்படுத்தும்' என கூறினார். பெய்ஜிங்கில் உள்ள அரசாங்கம் – சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டு 72 ஆண்டுகள் நிறைவடைகின்றன – இதுவரை பொதுக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை, அதே பகுதியில் 13 பி.எல்.எ. விமானங்கள் இரண்டாவது முறையாக தாய்வான் மற்றும் பிலிப்பைன்ஸ் இடையே நீரின் மேல் பறந்தன.



## ருமேனியா மருத்துவமனை தீவிபத்து; 9 பேர் உயிரிழப்பு!

ருமேனியாவிலுள்ள மருத்துவமனையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் குறைந்தது ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒருவருடத்துக்கும் குறைவான காலத்தில் நாட்டில் சுகாதார வசதிகளில் நடந்த மூன்றாவது கொடிய சம்பவம் இதுவாகும்.

தென்கிழக்கு துறைமுக நகரமான கான்ஸ்டன்டாவில் உள்ள மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் இந்த தீ சம்பவம் பதிவாகியுள்ளது.

இதனைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் கடுமையான போராட்டத்திற்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து கூடுதல் தீயணைப்பு குழுக்களை வரவழைத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை.

மருத்துவமனையின் கீழ் மட்டத்திலிருந்து நோயாளிகள் ஜன்னல்களிலிருந்து குதிக்கின்றமையையும், தீயணைப்பு வீரர்கள் மக்களை வெளியே கொண்டு செல்கின்றமையையும் காணொலி காட்சிகள் காட்டின.

தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த 10 பேர் உட்பட 113 நோயாளிகள் தீவிபத்து ஏற்பட்டபோது மருத்துவமனையில் இருந்தனர் என இடைக்கால சுகாதார அமைச்சர் செசெக் அட்டிலா கூறினார். தப்பிப்பிழைத்த அனைவரும் இப்போது வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஜனாதிபதி கிளாஸ் ஐஹன்னிஸ் ஒரு அறிக்கையில், 'சோகத்தில் நான் அதிர்ச்சியடைகிறேன்,' என்றும் இது ருமேனியாவின் சுகாதார அமைப்பின் உள்கட்டமைப்பு இல்லாததை உறுதிப்படுத்துகிறது என்றும் கூறினார். 1.9 கோடி மக்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நாடான ருமேனியா, கடந்த 12 மாதங்களில் மற்ற இரண்டு கொடிய மருத்துவமனை தீ சம்பவங்களை அனுபவித்துள்ளது, இது தொற்றுநோயின் பின்னணியில் அதன் சுகாதார வசதிகள் பற்றிய கவலைகளை எழுப்பியது.

ஜனவரியில், தலைநகர் புக்கரெஸ்டில் உள்ள கொவிட்-19 மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து நோயாளிகள் கொல்லப்பட்டனர். 2 மாதங்களுக்கு முன்பு, வடகிழக்கு பியாட்ரா நியாம்ட் கவுண்டி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரேஸில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு; பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்

பிரேஸில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது

பிரேஸிலில் அடுத்த ஆண்டு முக்கிய தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. கொரோனா பரவல் நிலையை தற்போதைய ஜனாதிபதி கையாண்ட விதம் குறித்து மக்கள் அதிருப்தியில் உள்ள நிலையில் கருத்துக்கணிப்பின் அடிப்படையில் அவர் பின்னடைவைச் சந்தித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கொரோனாத் தொற்று காரணமாக 6 லட்சம் பேர் மரணித்தனர் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். நேற்றைய தினம் 160க்கும் மேற்பட்ட நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# நாளை முதல் இந்தியா– இலங்கை இணைந்து பிரமாண்ட இராணுவப் பயிற்சி அம்பாறையில்

இந்தியா மற்றும் இலங்கை இராணுவத்தினர் இணைந்து மித்ரா சக்தி என்ற பெயரில் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் எட்டாவது கட்ட பாரியளவிலான இராணுவப் பயிற்சி இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறையில் நாளை முதல் 15 ஆம் திகதி வரை 12 நாள்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு இராணுவங்களின் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்தவும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன என இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. தெற்காசிய நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் இரு நாட்டு இராணுவத்துக்கும் இடையேயான ஒத்துழைப்பை அடிமட்ட அளவில் வலுப்படுத்தவும் இந்தப் பயிற்சி உதவும் என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் பாரிய படையணியுடன் இணைந்து, இந்திய இராணுவத்தின் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த 120 வீரர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர். இரு நாட்டு இராணுவங்களுக்குமிடையேயான ஏழாவது கட்டப் பயிற்சி புனேயில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மதுரையில் கிராமசபைக் கூட்டத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பு

மதுரை பாப்பாபட்டியில் நடந்த கிராமசபைக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், “மரபின்படி கிராம சபைக் கூட்டம் நடத்தப்படுகிறது. பாப்பாபட்டி கிராம சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டமை பெருமை அளிக்கிறது. கொரோனா காரணமாக 2 ஆண்டுகளாக கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. தேர்தலில் நாம் குறிப்பிட்ட 505 வாக்குறுதிகளில் 202 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சொல்லாத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளதால் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்று தெரிவித்திருக்கிறார்.

இது எனது அரசு அல்ல; நமது அரசு; சாமானியர்களுக்கான ஆட்சி என்று தெரிவித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கிராமம், நகரம் பெருநகரம் என ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒட்டுமொத்தமாக தமிழகத்தை ஒளிமயமான தமிழகமாக உருவாக்க வேண்டும். இதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என்று கோரிக்கையும் விடுத்துள்ளார்.




# தடுப்பூசிச் சான்று இருப்பவருக்கே மது வழங்க தமிழகத்தின் விருதுநகர் ஆட்சியர் உத்தரவு

கொரோனாத் தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழைக் காண்பித்தால் மட்டுமே டாஸ்மாக் கடைகளில் மது வழங்கப்படும் என விருதுநகர் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், டாஸ்மாக் விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடம் மதுபானம் வாங்குபவர்கள் தடுப்பூசி செலுத்தியுள்ளார்களா என்பதை உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தாதோருக்கு மது விற்றால் சம்பந்தப்பட்ட கடை விற்பனையாளர் மீது பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியா வரும் இங்கிலாந்து நாட்டினருக்கும் பத்து நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தல்!




வெளிநாடுகளில் இருந்து தங்கள் நாட்டிற்கு வருபவர்களுக்கான பயணக் கட்டுப்பாடுகளை இங்கிலாந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர் தளர்த்தியது. ஆனால், இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வருபவர்களுக்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்து வருகின்றன.

தற்போது அமுலில் உள்ள நடைமுறைப்படி இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வரும் இந்தியர்கள் விமான நிலையத்தில் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். பரிசோதனையில் கொரோனா உறுதி செய்யப்பட்டால் அவர்கள் சிகிச்சைக்குச் செல்ல வேண்டும். கொரோனா நெகட்டிவ் என முடிவு வந்தால் இந்தியப் பயணிகள் 7 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் மீண்டும் கொரோனாப் பரிசோதனை செய்ய வேண்டும்.

இதற்கிடையில், இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வரும் பயணிகளுக்கு இங்கிலாந்து மேலதிகமாக புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. நாளை திங்கட்கிழமை முதல் அமுலாகவுள்ள இந்தப் புதிய கட்டுப்பாடுகளின்படி, இங்கிலாந்து வரும் இந்தியர்கள் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக்கொண்டபோதும் 10 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உள்படவேண்டும்.

இந்தியாவில் கொவிஷீல்ட் தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக்கொண்டபோதும் இங்கிலாந்து வரும் இந்தியர்கள் கொரோனாத் தடுப்பூசி செலுத்தாத நபர்களாகவே கருத்தப்படுகின்றனர். கொவிஷீல்ட் தடுப்பூசி தொடர்பாக இந்தியா - இங்கிலாந்து நாடுகளுக்கிடையே பேச்சு நடைபெற்றது. இந்தியாவின் கொவிஷீல்ட் தடுப்பூசியில் எந்த சிக்கலும் இல்லை என்றும் இங்கிலாந்து, தடுப்பூசிக்கான சான்றிதழில்தான் பிரச்சினை என்றும் கூறியது. இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்கு இடையேயும் இந்த விடயத்தில் கருத்து வேறுபாடு நிலவிவருகிறது.

இந்த விவகாரத்தில் இங்கிலாந்துடன் இந்தியா தொடர்ந்தும் பேச்சு நடத்தியபோதிலும் இந்தியாவுக்குச் சாதகமான எந்த முடிவும் எட்டப்படவில்லை. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து இங்கிலாந்து வரும் இந்தியர்கள் நாளை திங்கட்கிழமை முதல் 10 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், இங்கிலாந்து அரசின் நடவடிக்கைக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது. அதன்படி, நளை திங்கட்கிழமை முதல் இங்கிலாந்தில் இருந்து இந்தியா வரும் இங்கிலாந்து நாட்டினர் அனைவரும் 10 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலைப் பின்பற்ற வேண்டும் என்றும் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளபோதும் தனிமைப்படுத்தலை சந்திக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தியிருந்தாலும் இந்தியா வரும் இங்கிலாந்து நாட்டினர், தாம் பயணம் மேற்கொள்வதற்கு 72 மணிநேரத்திற்குள் கொரோனாப் பரிசோதனை செய்து ‘நெகட்டிவ்’ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்எனவும், இந்தியாவுக்குவந்தவுடனும் இங்கிலாந்துப் பயணிகளுக்கு கொரோனாப் பரிசோதனை செய்யப்படும் என்றும், 10 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலின் போது எட்டாவது நாளில் இரண்டாவது முறையாக கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை இந்திய மத்திய சுகாதாரத்துறை மற்றும் விமானப்போக்குவரத்து அமைச்சகம் அமுல்படுத்தும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி செலுத்துவதில் வேகம் தேவை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் அறிவுறுத்தல் விடுப்பு



இந்தியாவில் இதுவரை சுமார் 14 லட்சம் கர்ப்பிணிகள் கொரோனாவுக்கு எதிராக முதல் டோஸ் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டுள்ளனர். ஆனாலும் இது போதுமானதல்ல என்று தெரிவித்துள்ள வல்லுநர்கள், கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் கர்ப்பிணிகள் மத்தியில் இப்போதுதான் விழிப்புணர்வு ஏற்பட்டுவருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய மருத்துவஆராய்ச்சிக்கழகம், கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி செலுத்துவதில் இன்னும் வேகம் தேவை என்று அறிவுறுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மக்களுக்கான அரசியலைச் செய்ய முடியாத அரசியல்வாதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் கருத்து



அரசியல் கைதிகளை அச்சுறுத்திய அமைச்சரின் வருகை தொடர்பான விடயத்திற்கே தலைமையிடம் தங்கள் கருத்தைச் சொல்லவில்லை என்றால். இவர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் எதனைப் பேசிப் பெற்றுத் தரப் போகின்றார்கள். அவர்கள் நினைக்கின்ற அரசியலைத் தான் இவர்கள் செய்ய முடியுமே ஒழிய இவர்கள் நினைக்கின்ற, எமது மக்களுக்கான அரசியலைச் செய்ய முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

சமகால நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

லொஹான் ரத்வத்த அவர்கள் அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில் சென்றார் என்றும் தமிழ்க்கைதிகளை மண்டியிடச் செய்தார் என்றும், பாதணியை நக்கும்படி சொன்னார் என்றும் சொல்லப்பட்டது. அவ்வாறான ஒருவர் மட்டக்களப்பிற்கு வந்திருக்கின்றார். அவர் வரவேற்கப்பட்டாரா? இல்லையா? என்பது வேறு விடயம். ஆனால், அவர் வருகை தந்து கலந்து கொண்ட கூட்டத்தில் அவருடன் இணைந்து யார் யார் கலந்து கொண்டிருந்தார்கள் என்பதையே பார்க்க வேண்டும்.

இவர்கள் உண்மையில் ஒழுங்காகத் தமிழ் மக்களுக்காக அரசியல் செய்பவர்களாக இருந்திருந்தால் எமது மக்களின் தற்போதைய நிலை அறிந்து அவரை வரவேண்டாம், தமிழ் மக்கள் கடும் எதிர்ப்போடு இருக்கின்றார்கள் என்று அவரின் வருகையைத் தடுத்திருக்க வேண்டும். அவ்வாறானதொரு முடிவைக் கட்சித் தலைமை எடுத்திருந்தால் அதனை மறுத்திருக்க வேண்டும்.

அதை விடுத்து, அரசாங்கக் கட்சி அனுப்பியது, தலைமை அனுப்பியது என்றால் குறைந்தபட்சம் அவ்வாறானவர் வருகை தந்த கூட்டத்தில் கலந்துகொள்ளாமலாவது இருந்திருக்க வேண்டும். இதில் எதுவுமே செய்யவில்லை. இது ஒரு சாதாரண விடயம். இந்த விடயத்திற்கே தலைமையிடம் தங்கள் கருத்தைச் சொல்லவில்லை என்றால். இவர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் எதனைப் பேசிப் பெற்றுத் தரப் போகின்றார்கள்.

அரச தரப்பில் இருப்பவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நினைக்கின்ற அரசியலைத் தான் இவர்கள் செய்ய முடியுமே ஒழிய இவர்கள் நினைக்கின்ற, எமது மக்களுக்கான அரசியலைச் செய்ய முடியாது. எனவே மக்களை இன்னும் இன்னும் பேய்க்காட்ட வேண்டாம் என்று தெரிவித்தார்.

## காட்டுப் பிரதேசத்தில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு திஹிலி வெட்டை வாவிக்கு அப்பால் உள்ள காட்டுப் பிரதேசத்தில் இயங்கிவந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை இன்று அதிகாலை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கிருந்த மூன்றுபேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் ஒருலட்சத்து 65 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, நான்கு கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 4 லட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் சில பொருள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் கசிப்பினை வேறுபகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் தோணியொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மற்றும் பொருள்களும் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஏறாவூர்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பீ.எஸ்.பீ. பண்டார தெரிவித்தார்.



## வயலுக்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 38 ஆம் கிராமத்தில் உள்ள வாய்க்காலில் இருந்து நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டு பிடிக்கப்பட்ட சடலம் 38 ஆம் கிராமத்தின் 3ஆம் வட்டாரத்தில் வசிக்கும் 47வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம் சுந்தரலிங்கம் என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்து வயலுக்கு போனவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

38 ஆம் கிராமம் வைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள வயல் வடிகான் நீருக்குள் துவிச்சக்கரவண்டியும் சடலமும் கிடப்பதனை கண்ட அவ்வழியாக சென்ற ஆடு மேய்க்கின்றவர்களால் கிராம மக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த சடலம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்.



## மட்டக்களப்பில் அதிகரிக்கும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திகள் இடம்பெறுவதை அறியமுடிகிறது . அதிலும் மட்டக்களப்பின் படுவான் கரைப்பகுதியில், ஆறுகள், குளங்களை அண்டிய பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அண்மையில் கண்டியநாறு, அடைச்சல் போன்ற குளங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாகவும், அதனால் அக்குளங்களில் உள்ள மீனினங்கள் இறக்கின்றன எனவும் செய்திகள் வெளியாகிருந்தன.

அப்பகுதியில் இருந்து பெருமளவிலான கசிப்புக்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. அதேபோன்று சாமந்தியாறு, புளுகுணாவை குளம், விளிம்பாகுளம், சிறையாத்தீவு போன்ற பகுதிகளிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டிருந்தன. இவ்வாறு அமையும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகளை, அதிகளவில் சாதாரண மக்களே அருந்துகின்றனர். இவ்வுற்பத்திகளினால் சமூகம் சீர்குலைக்கப்படுவதுடன், உடல் ஆரோக்கியத்திலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இளம் சமூகத்தினரும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையும், அதற்கு அடிமையாகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது. எனவே மாவட்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் இச்சட்டவிரோத செயற்பாடுகளை இல்லாமல் ஆக்குவதற்கு ஒன்றாக இணைய வேண்டும். சமூக நலனில் அதீத அக்கறை கொண்டு, ஆரோக்கியமானதும், ஒழுக்கமானதுமான சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும். இதற்கான பூரண ஒத்துழைப்பினையும், தடைகளையும் நீக்குவதற்கு மக்கள் பிரதிநிதிகளும் முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .




### சென்னையின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி

# சென்னையை வீழ்த்தியது ராஜஸ்தான் ரோயல்ஸ்

இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 47ஆவது போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. ருதுராஜ் கெய்வாட்டும், ஜடேஜாவும் ஆட்டமிழக்காமல் முறையே 101, 32 ஓட்டங்களைப் பெற்றனர். ராஜஸ்தான் அணியின் ராகுல் தெவாடியா 3 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கித் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, மிக அதிரடியாக விளையாடி 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. ஷிவம் துபே ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் ஜெய்ஸ்வால் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஷர் துல் தாகூர் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்ட நாயகனாக ருதுராஜ் கெய்வாட் தெரிவானார்.

இந்தப் போட்டியின் நிறைவில் சென்னை அணி 18 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்திலும், டெல்லி அணி அதே 18 புள்ளிகளோடு இரண்டாமிடத்தி லுமுள்ளன. பெங்களூர் அணி மூன்றாமிடத்திலும், கொல்கத்தா அணி நான்காமிடத்திலுமிருக்கின்றன.

# டெஸ்ட் தொடரில் இந்திய அணியைத் தோற்கடிக்க வேண்டும் இதுவே இலட்சியம் என்கிறார் நியூசிலாந்து வீரர் கொன்வே




ரி-20 உலகக் கிண்ணக் கிரிக் கெட் தொடருக்குப்பின்னர் நியூ சிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 போட் டிகள் கொண்ட ரி-20 தொடரிலும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் பங்கேற்கிறது. கான்பூர், மும்பை மைதானங் களில் டெஸ்ட் போட்டிகள் நடை பெறவுள்ளன. டெஸ்ட் தொடர் நவம்பர் 25 இல் ஆரம்பமாகி டிசெம்பர் 7 இல் முடிவடைகிறது.

இந்தியாவுக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணம் பற்றி பேட்டியளித்த நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் டெவோன் கொன்வே, இந்தி யாவை டெஸ்ட் தொடரில் தோற் கடிக்க வேண்டும் என்கிற இலட் சியத்துடன் உள்ளோம். இதை நாங்கள் சாத்தியமாக்கவேண்டும். இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் தோற்கடித்ததை விடவும் இந்தியாவை அதன் சொந்த மண்ணில் தோற்கடிப்பது சவாலானதாகும். அது மிகப்பெரிய சாதனையாக இருக்கும். இந்தத் தொடரில் எங்களை நிரூபிக்க முயல்வோம். இந்தியாவில் எங்கள் துடுப்பாட்டம் சிறப்பாக இருக்கவேண்டும். ஓட்டங்களை எடுப்பதற்கான வழிமுறைகள் எங்களிடம் இருக்கவேண்டும். ஓட்டங்களை எடுக்க முயற்சிக்காது தனியே துடுப்பாட்டம் ஆடினால் அது சிக்கலாகிவிடும். ஒரு திட்டம் வகுத்து அதைப் பின்பற்றவேண்டும். இது மிகவும் சவாலானதாகும்" என்று கூறியுள்ளார்.

# மும்பையை வீழ்த்தியது டெல்லி அணி!




இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 46 ஆவது போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் மும்பை இந்தி யன்ஸ் அணியை வென்றது. நேற்றைய இரு போட்டிகளில் முத லாவதாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சூர்யகுமார் யாதவ் 33 ஓட்டங்களை எடுத்திருந்தார். டெல்லி அணியின், ஆவேஷ்கானும் அக்ஸர் பட்டேலும் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

வெற்றி இலக்கை இலகுவாக எட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட டெல்லி அணி ஒரு கட்டத்தில் 77 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த தடுமாறினாலும் ஸ்ரேயாஸ் ஐயரின் 33, அஸ்வினின் 20 ஓட்டங்கள் உதவியுடன் வெற்றியிலக்கை 19.1 ஓவர்களில் அடைந்தது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக டெல்லி அணியின் அக்ஸர் பட்டேல் தெரிவானார்.

# யு.இ.எவ்.ஏ. ஐரோப்பா கால்பந்தாட்டத்தொடர் குழுநிலைப் போட்டிகளின் பெறுபேறுகள்

யு.இ.எவ்.ஏ. ஐரோப்பா கால்பந்தாட்டத் தொடரின் லீக் குழுப் போட்டிகளில் ஏ.எஸ். ரோமா, டொட்டன்ஹாம் அணிகள் வெற்றிய டைந்துள்ளன.

ஏ.எஸ்.ரோமா அணி 3-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனின் ஸோர்யாலுஹான்ஸ்க் அணியை வீழ்த்தியது. ஜோஸ் மோரின் ஹோவின் பயிற்சியின் கீழ் ரோமா அணி 10 ஆட்டங்களில் 8 இல் வெற்றி கண்டுள்ளது. கிறிஸ் ஸ்மாலிங், டொமி ஆப்ரஹாம் ஆகியோர் இரண்டாம் பாதியில் அடுத்தடுத்த நிமிடங்களில் கோலடித்தனா. இறுதியாக ஸ்டீபன் வெற்றிக் கோலை அடித்தார்.

குழு இ பிரிவில் லேஸியோ அணி 2-0 என்ற கோல் கணக்கில் லோகோமோடிவ் மாஸ்கோ அணியை வீழ்த்தியது. தொடர் தோல்விகளைக் கண்டு வந்த டொட்டன்ஹாம் அணி 5-1 என்ற கோல் கணக்கில் எவ்.சி.முரா அணியை வீழ்த்தியது. நட்சத்திர வீரர் ஹரி கேன் ஹட்ரிக் கோலடித்தார். லேஜியா வார்ஸா அணி 1-0 என லீசெஸ்டரை வீழ்த்தியது. வெஸ்ட் ஹாம் அணி 2-0 என ரபிட் வியன் னாவையும், லயான் அணி 3-0 என பிரான்ட்பை அணியையும், ஸ்பார்டா பிராக் அணி 1-0 என ரேஞ்சாஸ் அணியையும் வீழ்த்தின.






# பால் மாவின் விலை 200 ரூபாவால் எகிறும்?

இலங்கையில், ஒரு கிலோ பால் மாவின் விலை 200 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து பால் மாவின் விற்பனை விலை 1,145 ரூபாவாக அதிகரிக்கும் என்று பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய திருத்தப்பட்ட விலைகள் அமைச்சரவையின் அடுத்த கூட்டத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, பால் மா பற்றாக்குறை அடுத்த வாரத்துக்குள் தீர்க்கப்படும் என்றும்,தங்கள் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட ஏறத்தாழ 3 லட்சம் தொன் பால் மா தற்போது துறைமுகத்தில், தேங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பால் மா விலை அதிகரிக்கப்படாமை காரணமாக, உள்ளூர் இறக்குமதியாளர்களுக்கு இந்த ஆண்டில் மாத்திரம் 100 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையைத் தீர்க்க பால் மாவை இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசின் தவறான நிதிக்கொள்கையே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்

## போட்டுத் தாக்குகிறார் லக்ஷ்மன் கிரியெல்ல



இலங்கையில் கொவிட் தொற்றால் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

மாறாக தற்போதைய அரசாங்கத்தின் தவறான கொள்கைகள் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கொவிட் –19 தொற்றுநோயால் ஆசியபிராந்தியத்தில்பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரே நாடு இலங்கை ஆகும் என அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். தொற்றுநோய்களின் போது இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் பொருளாதாரத்தையும் வெளிநாட்டு இருப்புக்களையும் நிர்வகித்ததாக குறிப்பிட்ட அவர், எனினும் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 50 சதவிகிதத்துக்கு மேல் குறைந்துவிட்டதாக கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த இரண்டு தேர்தல்களின் போது ஆதரவளித்த தொழிலதிபர்களுக்கு ஆதரவாக தற்போதைய அரசாங்கம் வற்வரியைக் குறைத்துள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு பெரும் வருமானம் குறைவு ஏற்பட்டுள்ளது.

எனவே தற்போதைய அரசாங்கத்தின் தவறான நிதிக் கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு பங்களிக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.





# புதிய சந்தை திறந்துவைப்பு

*நீண்டகாலமாக புனரமைப்பு எதுவுமின்றி காணப்பட்ட வட்டக்கச்சி சந்தை கரைச்சிபிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் திறந்துவைக்கப்பட்டது.*



## 5 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

நவம்பர் மாதத்துக்குள் நாளொன்றுக்கு 5 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் புதிய சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப இந்த இலக்கை அடைய தேவையான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சிறைச்சாலை அதிகாரி குடிபோதையில் குழப்பம்

குடிபோதையில குழப்பம் விளைவித்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலி உனவட்டுன பிரதேச ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் பங்கேற்ற போது இந்த அதிகாரி குழப்பம் விளைவித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கேகாலை சிறைச்சாலையின் பதில் சிறைச்சாலை ஆணையாளர் ஒருவரே இவ்வாறு குடிபோதையில் குழப்பம் விளைவித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலை திணைக்களம் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## பி.சி.ஆர். பரிசோதனைகள் யாவும் விமான நிலையத்தில் திடீர் நிறுத்தம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை திடீரென நிறுத்தப்பட்டதன் தீவிரத்தை, மருத்துவ நிபுணர்கள் சம்மேளனம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தனவுக்கு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், பி.சி.ஆர். சோதனை இன்றி இலங்கைக்குள் வர முடியும்.

எனினும் 2 அளவு தடுப்பூசிகளை செலுத்திய தடுப்பூசி அட்டை, வருகைக்கு 72 மணி நேரத்துக்குள் பெறப்பட்ட பி.சி.ஆர்.அறிக்கை வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இலங்கைக்கு வெளியே பெறப்படும் பி.சி.ஆர். அறிக்கைகளின்நம்பகத்தன்மையைக் கண்டறிய எந்த முறையும் இல்லாததால், இது மிகவும் ஆபத்தானது என்று மருத்துவ நிபுணர் சம்மேளனத் தலைவர் ஏ.எம்.எஸ். தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

போலிதடுப்பூசிசான்றிதழ்கள், பொய்யான பி.சி.ஆர். அறிக்கைகள் இலங்கையில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலும் பெறப்படலாம். இந்த சூழ்நிலையில், கட்டுநாயக்கவில் கட்டாய பி.சி.ஆர். சோதனையை தவிர்ப்பதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை.

அத்துடன் அண்மையில் பி.சி.ஆர். சோதனைக்காக விமான நிலையத்தில், வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையில் பி.சி.ஆர். சோதனையை நிறுத்தும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளின் இந்த செயல்பாடு, ஆபத்தான கொரோனா மாறுபாடுகள், நாட்டுக்குள் வர அனுமதிக்கும். அத்துடன், சமுதாயத்தின் அனைத்து பிரிவினரிடமிருந்தும் இதுவரை பெறப்பட்ட கடினமான கட்டுப்பாட்டை முற்றிலும் அழித்துவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்த அபாயகரமான சூழ்நிலையை சம்பந்தப்பட்ட நிபுணர்களின் பங்கேற்புடன் மீள் பரிசீலனை செய்து பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டும் என லக்குமார் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டுள்ளார்.

## மேல் மாகாணத்தில் மூன்றரை வயது சிறுவனை போதை வியாபாரத்துக்குப் பயன்படுத்திய தாய்!

மூன்றரை வயதுடைய சிறுவனை பயன்படுத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குழுவினர் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேவல்தெணிய பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இந்தக் கடத்தல் நடவடிக்கைக்குச் சிறுவனின் தாயும் உதவியுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்படும்போது சிறுவனின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 06 கிராம் போதை மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2021இல் வெளியிடப்பெற்றது.